## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாள் வெள்ளிக்கிழமை

***இ.ம.எண். 228/2021 In அசல் வழக்கு எண்: 7/2020***

1. ஆனந்தன்
2. கலியபெருமாள் ......மனுதாரர்கள்-1, 2 பிரதிவாதிகள்

-எதிர்-

வனஜா ....... எதிர்மனுதாரர்-வாதி

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 13.9.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.எஸ்.வி.கௌரி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.குபேரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-***

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1,2 பிரதிவாதிகள் என்றும், இம்மனு எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரரால் தன்னை 1ம் பிரதிவாதியாகவும், தன் தந்தையாரை 2ம் பிரதிவாதியாகசும் சேர்த்து மொத்தம் 7 நபர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கை நடத்துவதற்கு முதலாவதாக இந்த வழக்கானது இந்த நீதிமன்றத்தின் வரையறைக்கு உட்பட்டதல்ல என்றும், எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ வாங்கவில்லை என்றும் 3ம் நபரிடம் மட்டுமே வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் தனிநபராக கூட்டுமுறையின்றி வாங்கியுள்ளார்கள் என்றும், ஆகையால் 1, 2 பிரதிவாதிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், வாதி வாங்கியதாக கூறும் வழக்கு சொத்தில் உண்மையான

உரிமையாளரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், 1ம் பிரதவாதியிடம் அவர் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் பெறப்பட்ட சொத்தின் அளவீட்டை குறித்து நடவடிக்கை எடுக்ககும் உரிமையானது வாதிக்கு கிடையாது என்றும், வாங்குபவரே விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தவறுதலாக எந்த ஒரு விசாரணையும் இன்றி வாங்கிய தவறானது வாதியையே சாரும் என்றும், இவ்வழக்கில் ஒரே நாளில் வாதியும் 1ம் பிரதிவாதியும் நிலத்தை பதிவு செய்து உரிமையாளராக மாற்றிக்கொண்டார்கள் என்பதை தவிர வேறு எந்த உறவுமுறையும் இருவரிடையே கிடையாது என்றும், வாதி தன்னை 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரி என்று கூறுவது ஒரு நிகழ்வே தவிர உண்மையான உறவு முறை அவர்கள் இருவரிடையே நடைமுறையில் கிடையாது என்றும், 20 வருடங்களுக்கு முன்பு வீட்டிலிருந்த 10 பவுன் நகை மற்றும் சில விலையுயர்ந்த பொருட்களை எடுத்து சென்றுவிட்டபடியால் இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றும் இந்நிலையில் வாதியானவர் 1ம் பிரதிவாதியை பழிவாங்க வேண்டும் என்று தனக்குள்ள பணபலம் மற்றும் ஆள்பலத்தை கொண்டு 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தந்தைக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தி பணவிரயம் மற்றும் காலவிரயம் செய்ய வேண்டும் என்று தொடுக்கப்பட்ட வழக்காகும் என்றும் எனவே இந்த வழக்கிற்கு முறையான வழக்குமூலம் என்பதே கிடையாது என்றும், வாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.No.18572/2018 ன் மீதான உத்தரவினை பெற்று அதன் வழியே 4ம் பிரதிவாதியால் ஆய்வு செய்யப்பட்டு வாதி கூறிய புகார்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் பத்திரத்தில் உள்ள அளவீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வருவாய்துறை ஆவணங்களில் உள்ள அளவீடுகளின் அடிப்படையில் வாதிக்குரிய இடம் வாதியிடமே உள்ளது என்றும் ஆய்வறிக்கை தாக்கல் செய்த பிறகு துறைசார்ந்த ஆய்வறிக்கைக்கு துறை சார்பான மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது ஆள்வரைக்குட்பட்ட உயர்நீதிமன்றத்தில் தான் மேல்நடவடிக்கை தொடரப்பட வேண்டும் என்பது நடைமுறையாகும் என்றும், அதை தவிர்த்து அவசியமான நபர்களை வழக்கில் சேர்க்காமலும் சரியான வழக்கு மூலம் இல்லாமலும் நீதிமன்ற ஆள்வரைக்கு உட்படாத நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாலும் இவ்வாறு பின்னிட்ட காரணங்களால் வழக்கினை எடுத்த எடுப்பிலேயே மேற்கூறிய கட்டளை 7 விதி 11ன் கீழ் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நிராகரித்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. ***எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:***

மனுதாரர் வழக்குரையை நிராகரிக்க கோரி தாக்கல் செய்திருக்கும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இவ்வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்கள்

திரு.ஆர்.காளிதாஸ் வழக்கறிஞர், சிதம்பரம் அவர்களை தமது வழக்கறிஞராக நியமனம் செய்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரைக்கு வாதி தரப்பில் பதில் வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டு 3 முதல் 7 பிரதிவாதிகள் ஆஜரில்லா நிலையில் தற்போது வாதி தரப்பில் சாட்சிய விசாரணைக்கு சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்தா உள்ள நிலையில் தற்போது முரண்பாடாக இந்த மனுதாரர்கள் இந்த மனுவை வேறு வழக்கறிஞரை நியமனம் செய்ததாக கூறி முன்னிட்டுள்ள இம்மனு ஏற்ககூடியதல்ல என்றும் உள்நோக்குடையது என்றும், மனுதாரர்க்ள இந்த வழக்கை நடத்துவதற்கு நீதிமன்ற வரையறைக்கு உட்பட்டதல்ல என்பது தவறானதாகும் என்றும், இவ்வழக்கு சொத்து நீதிமன்ற ஆள்வரைக்கு உட்பட்டதாகும் என்றும், வழக்கு சொத்தில் வாதியின் உரிமை குறித்து உரிய ஆவணங்களையும் சாட்சியங்களையும் ஆய்வு செய்யாமல் ஒருதலைபட்சமாகவும் முரண்பாடாகவும் உத்தரவுகள் வருவாய்துறை மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் சொத்தின் உரிமை குறித்து வழக்கு விசாரணை நீதிமன்றம் மட்டுமே சாட்சிய ஆவணங்களை பரிசீலனை செய்து முடிவு செய்ய உகந்ததாகும் என்றும், 1ம் மனுதாரர் இந்த வாதியின் உடன்பிறந்த சகோதரர், 2ம் மனுதாரர் வாதியின் தகப்பனார் இந்நிலையில் வழக்கு சொத்தின் உரிமையை மறைத்து மோசடி ஆவணங்கள் தயார் செய்து மேற்படி எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தின் உரிமையை மறைத்து மற்ற 4 முதல் 7 பிரதிவாதிகளிடம் பொய்யான ஆவணங்களை முன்னிட்டு ஆதாயம் பெற்றுள்ளதால் இவர்களை வழக்கு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த எதிர்மனுதாரர் உடன்பிறந்த சகோதரி என்பது ஒரு நிகழ்வே தவிர உண்மையான உறவுமுறை இல்லை என மனுதாரர் குறிப்பிட்டுள்ளது முரண்பாடானது என்றும், உறவுமுறை குறித்து மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யானது என்றும், இந்த எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டி இந்த 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரை தன் வயப்படுத்தி கொண்டு எதிர்மனுதாரர் சொத்துக்களை சட்டத்திற்கு முரணாக அடைய முற்படும் உத்தியாகும் என்றும், வாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவினை பெற்று அதன் வழியே 4ம் பிரதிவாதியால் ஆய்வு செய்யப்பட்டு வாதி கூறிய புகார்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் பத்திரத்தில் உள்ள அளவீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வருவாய்துறை ஆவணங்களில் உள்ள அளவீடுகளின் அடிப்படையில் வாதிக்குரிய இடம் வாதியிடமே உள்ளது என்றும், ஆய்வறிக்கை தாக்கல் செய்த பிறகு துறை சார்ந்த ஆய்வறிக்கைக்கு துறை ரீதியான மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது ஆள்வரைக்குட்பட்ட உயர்நீதிமன்றத்தில்தான் மேல்நடவடிக்கை தொடரப்பட வேண்டும் என்பது நடைமுறை என்பது ஏற்கக்கூடியதல்ல என்றும், உரிமையியல் பிரச்சினையை முடிவு செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டுமே

உட்பட்டதாகும் என்றும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள அனைவரையும் தரப்பினராக சேர்த்து முன்னிட்டுள்ளதால் வழக்கு தரப்பினர் குறித்த இக்குற்றச்சாட்டு ஏற்கத்தக்கதல்ல என்றும், சரியான வழக்குமூலம் இல்லை என்பது தவறானதாகும் என்றும் எனவே மனுதாரரின் இந்தமனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4**. இருதரப்பிலும் சாட்சிய மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வாதங்கள் மற்றும் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரரான வாதி *வழக்கு சொத்து வாதிக்கு உரிமையுடையது என விளம்புகை செய்யவும், 6ம் பிரதிவாதியின் 18.7.2019 தேதியிட்ட செயல்முறை ஆணையை ரத்து செய்து செல்லத்தக்கதல்ல என உத்தரவு பிறப்பிக்கவும், வழக்கிடைச்சொத்துக்குரிய இழப்பீட்டு தொகையை மோசடியாக பெற்றுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியிடம் ஒப்படைக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்* கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடம் நேரடியாகவோ மறைமுகமாகவோ வாங்கவில்லை, 3ம் நபரிடம் மட்டுமே வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் தனிநபராக கூட்டுமுறையின்றி வாங்கியுள்ளார்கள் என்றும், ஆகையால் 1, 2 பிரதிவாதிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், வாதி வாங்கியதாக கூறும் வழக்கு சொத்தில் உண்மையான உரிமையாளரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், 1ம் பிரதவாதியிடம் அவர் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் பெறப்பட்ட சொத்தின் அளவீட்டை குறித்து நடவடிக்கை எடுக்ககும் உரிமையானது வாதிக்கு கிடையாது என்றும், தவறுதலாக எந்த ஒரு விசாரணையும் இன்றி வாங்கிய தவறானது வாதியையே சாரும் என்றும், இவ்வழக்கில் ஒரே நாளில் வாதியும் 1ம் பிரதிவாதியும் நிலத்தை பதிவு செய்து உரிமையாளராக மாற்றிக்கொண்டார்கள் என்பதை தவிர வேறு எந்த உறவுமுறையும் இருவரிடையே கிடையாது என்றும் பத்திரத்தில் உள்ள அளவீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வருவாய்துறை ஆவணங்களில் உள்ள அளவீடுகளின் அடிப்படையில் வாதிக்குரிய இடம் வாதியிடமே உள்ளது என்றும் ஆய்வறிக்கை தாக்கல் செய்த பிறகு துறைசார்ந்த ஆய்வறிக்கைக்கு துறை சார்பான மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது ஆள்வரைக்குட்பட்ட உயர்நீதிமன்றத்தில் தான் மேல்நடவடிக்கை தொடரப்பட

வேண்டும் என்பது நடைமுறையாகும் என்றும் எனவே அசல் வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி மனுவை பரிசீலணை செய்வதற்கு முன்பு கட்டளை 7 விதி 11-ல் சொல்லப்பட்டுள்ள சட்ட வகைமுறையை அறிதல் அவசியமாகிறது. அதன்படி
"வழக்குரையை நிராகரித்தல்:-

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு வழக்குரை நிராகரிக்கப்படுதல் வேண்டும்:

(அ) ஒரு வழக்குமூலத்தையும் வெளிப்படுத்தாவிடத்து:

(ஆ) கோரப்பட்ட பரிகாரம் குறை மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிா்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் அம்மதிப்பீட்டைத் திருத்தும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து, வாதி அவ்வாறு செய்யத் தவறுகிறவிடத்து

(இ) கோரப்பட்ட பரிகாரம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் வழக்குரையானது குறைவாக முத்திரைவில்லை ஒட்டப்பட்ட தாளின்மீது எழுதப்பட்டிருக்கிறவிடத்தும், நீதிமன்றத்தால் நிா்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தேவைப்படும் முத்திரைத்தாளைக் கொடுக்கும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்யத்தவறுகிறவிடத்தும்:

(ஈ) உரிமை வழக்கானது சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வழக்குரையிலுள்ள உரையிலிருந்து தெரியவருகிறவிடத்து:

(உ) இரட்டைப் படிகளில் தாக்கல் செய்யப்படாதிருக்கும் போது,

(ஊ) வாதி விதி 9 இன் வகையங்களை கடைப்பிடிக்கத் தவறியிருக்கும் போது

வரம்புரையாக: மதிப்பீட்டைத் திருத்துவதற்காகவோ அல்லது தேவையான முத்திரைத்தாளைக் கொடுப்பதற்காகவோ நீதிமன்றத்தால் நிா்ணயிக்கப்பட்ட காலமானது நீட்டிக்கப்படுதல் ஆகாது: நீதிமன்றத்தால் நிா்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மதிப்பீட்டைத் திருத்துவதற்கு அல்லது, நிலவரத்திற்கேற்ப, உரிய முத்திரைத்தாளைக் கொடுப்பதற்கு, அசாதாரணத் தன்மையதான காரணம் எதனாலும், வாதி தடை செய்யப்பட்டிருந்ததாகவும் அத்தகைய காலத்தை நீட்டிக்க மறுப்பதானது வாதிக்குக் கடுமையான அநீதியை விளைவிக்கும் என்பதாகவும் அந்த நீதிமன்றம் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகத் திருப்தி கொண்டலான்றி."
என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சிபிசி கட்டளை 7 விதி 11 ல் குறிபபிட்டுள்ள 6 காரணங்களுக்காக மட்டுமே ஒரு வழக்குரையை நிராகரிக்க முடியும்,

அதன்படி மனுதாரா் தரப்பில் எதிா்மனுதாரா்-வாதி வாங்கியதாக கூறும் வழக்கு சொத்தில் உண்மையான உரிமையாளரை இவ்வழக்கில் தரப்பினராக சோ்க்கப்படவில்லை என்ற காரணத்திற்காக இவ்வழக்குரையை நிராகரிக்க கோரப்பட்டுள்ளது. ஆனால் சிபிசி கட்டளை 7 விதி 11 ல் குறிபபிட்டுள்ள 6

காரணங்களுக்காக மட்டுமே ஒரு வழக்குரையை நிராகரிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் உண்மையான உரிமையாளரை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்பதற்காக அசல் வழக்கினை நிராகரிக்க இயலாது.

மனுதாரர் மனுவில் பொதுவாக இந்த வழக்கிற்கு முறையான வழக்கு மூலம் என்பதே கிடையாது என குறிப்பிட்டிருந்தாலும், எந்த வகையில் இவ்வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்பதை மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும் மனுவில் **துறைசார்ந்த ஆய்வறிக்கைக்கு துறை சார்பான மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது ஆள்வரைக்குட்பட்ட உயர்நீதிமன்றத்தில் தான் மேல்நடவடிக்கை தொடரப்பட வேண்டும்** என குறிப்பிட்டிருந்தாலும், வாதி தாக்கில் செய்த பிராதின் பரிகாரங்களை பரிசீலனை செய்கையில், வாதி *வழக்கு சொத்து வாதிக்கு உரிமையுடையது என விளம்புகை செய்ய முதல் பரிகாரம் கோரப்பட்டு, அதன் தொடர்ச்சியாகவே 6ம் பிரதிவாதியின் 18.7.2019 தேதியிட்ட செயல்முறை ஆணையை ரத்து செய்து செல்லத்தக்கதல்ல என உத்தரவு பிறப்பிக்கவும், வழக்கிடைச்சொத்துக்குரிய இழப்பீட்டு தொகையை மோசடியாக பெற்றுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியிடம் ஒப்படைக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியுள்ளார். வாதி விளம்புகை பரிகாரம் கோராமல் நேரடியாக 18.7.2019 தேதியிட்ட செயல்முறை ஆணையை ரத்து செய்து செல்லத்தக்கதல்ல என உத்தரவு பிறப்பிக்க பரிகாரம் கோரியிருந்தால் மட்டுமே இதுகுறித்து மனுதாரர் குறிப்பிடுவது போல் துறை சார்ந்த ஆய்வறிக்கைக்கு துறை சார்பான மேல்நடவடிக்கை எடுக்கப்படலாம். ஆனால் எதிர்மனுதாரர் முதலில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார். இதனை கீழமை நீதிமன்றங்களில் மட்டுமே பெற இயலும். விளம்புகை பரிகாரத்தை* ***ஆள்வரைக்குட்பட்ட உயர்நீதிமன்றத்தில்தான் பெற இயலும் என்பதில்லை.*** *எனவே மேற்கண்ட பரிசீலனையின்போது* மேற்படி *அசல் வழக்கு இந்நீதிமன்ற விசாரணைக்கு ஏற்றதல்ல என்ற மனுதாரர்கள் தரப்பு கூற்று ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது.*

*இறுதியில். மனுதாரர் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.*

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல சொல்ல அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.